**Starting time 01.09 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.296/2009**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 16.08.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோதி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>**2**-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u> 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சமயத்தில் 2-ம் பிரதிவாதிக்கு திருமணமாகவில்லை என்றால், ஆமாம். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால், 2 மகன்கள், 1 மகள். நானும் எனது இருமகன்களும் ஒரே குடும்பமாகத்தான் இருந்தோம் என்றால், ஆமாம். எனது கணவர் ராமசாமி இறந்துவிட்டார் என்றால், ஆமாம். தாவா சொத்திலும், மற்ற சொத்துகளிலும் 2-ம் பிரதிவாதிக்கு, 4-ல் ஒரு பங்குள்ளது என்றால், ஆமாம். என்னுடைய கணவர் ராமசாமி மணிவிழுந்தான் கிராமத்தில் ஒரு சொத்தை கந்தசாமி அய்யர் என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால், ஆமாம், அதை விற்றுவிட்டதான் இங்கு வந்தோம். கந்தசாமி அய்யரின் கிரய ஆவணத்தில் 2-ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்துப் போட்டுள்ளார் என்றால், ஆமாம்.

2. என்னுடைய கணவரின் இறப்பு சான்றிதழை 2-ம் பிரதிவாதி அவரது பதிலுரையுடன் தாக்கல் செய்துள்ளார் என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி 1-ம்

பிரதிவாதிக்கு விற்ற சொத்து 2-ம் பிரதிவாதி குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவரது பெயரில் வாங்கப்பட்டது என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி ஏற்கனவே ரவி என்பவரிடம் ரூ.1,50,000/- கடன் வாங்கிய கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். அந்த கடனையும், அதற்கான வட்டியையும் 2-ம் பிரதிவாதி திருப்பி கொடுக்காததால் ரவி வழக்கறிஞர் அறிப்பு அனுப்பியுள்ளார் என்றால், தெரியாது. 2-ம் பிரதிவாதி பதிலறிவிப்பு கொடுத்து, அந்த பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதிதான் அந்த கடனை அடைத்தார் என்பதால் அதனால்தான் கிரய ஆவணத்தை தனது பெயரில் எழுதி வாங்கிவிட்டார் என்றால், கிரயம் செய்யவில்லை. ரவியிடம் பெற்ற கடன் தொகையை 1-ம் பிரதிவாதிதான் திருப்பி கொடுத்தார் என்றாலும், அதற்காகதாான் 1-ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றாலும், எனக்கு அனைத்து விவரமும் தெரியும் என்றாலும், சரியல்ல.

3. 2-ம் பிரதிவாதியும் 1-ம் பிரதிவாதியும் தங்களுக்கிடைய ஒரு முச்சலிக்கா எழுதிக் கொண்டார்கள் என்றாலும், அதில் 2-ம் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தினால் அவரது பெயருக்கு மறுக்கிரயம் ஏற்படுத்தி கொடுப்பதாக எழுதப்பட்டது என்றால், ஆமாம். கிரயப் பத்திரத்தையை பயன்படுத்திக்கொண்டு 1-ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் எடுக்க காவல்துறை அதிகாரிகளுடன் முயற்சி செய்கிறார் என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தபோதிலும், தற்போது வரையிலும் நானும், 2-ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் கூட்டாக அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்றால், ஆமாம். என்னுடைய பங்கையும் சேர்த்து 2-ம் பிரதிவாதி கிரயப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்ததால் அதை ரத்து செய்ய வேண்டிதான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம்.

4. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு

கொடுத்தேனா என்றால், ஆமாம். அதற்கு 1-ம் பிரதிவாதி பதிலறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி தன்னுடைய பதிலறிவிப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் சரியானவைதானா என்றால், அதை நான் படித்துப் பார்க்கவில்லை. வழக்கு சொத்தை 1-ம் பிரதிவாதி பலவந்தமாக சுவாதீனம் எடுக்க முயற்சித்ததால்தான் வழக்கு போட்டேன் என்றால், ஆமாம். வேறு நிலங்கள் எனக்கு தெரிந்துதான் விற்கப்பட்டதா என்றால், ஆமாம். கோவிந்தபாளையத்தில் உள்ள எனக்கு சொந்தமான சொத்தை ராமசாமி உடையாருக்கு நான் கிரயம் செய்து கொடுத்தேன் என்றால், ஆமாம். அந்த பணத்தை நான் என்ன செய்தேன் என்றால், 2-ம் பிரதிவாதி பெயரில் அந்த பணத்தை வைத்துதான் கிரயம் வாங்கினேன். 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்த தேதியன்று சொத்தின் சுவாதீனம் 1-ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை. 2-ம் பிரதிவாதி கடனை வட்டியுடன் செலுத்த தயாராக இருக்கிறார் என்றால், ஆமாம். 2-ம் பிரதிவாதி வாங்கிய கடனை வட்டியுடன் திருப்ப பெற்றுக்கொண்டு மறு கிரயம் எழுதிக்கொடுக்க 1-ம் பிரதிவாதி கடமைப்பட்டவர் என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி பெயரில் எழுதப்பட்டுள்ள கிரயப் பத்திரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால், ஆமாம்.

2-ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.27 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.